செய்தி வெளியீடு எண். 78 நாள்: 03.02.2018

**ஸ்ரீ வீரராகவ சுவாமி பெருமாள் தேவஸ்தானம் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி பொது விருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்**

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ சுவாமி பெருமாள் தேவஸ்தானம் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா நினைவு நாளையொட்டி பொது விருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்.

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவ சுவாமி பெருமாள் திருக்கோயிலில் 446 பக்தர்கள் பொது விருந்தில் கலந்துக்கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களுடன் உணவு அருந்தினர். பொன்னேரி வட்டம் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.பலராமன் அவர்கள் மற்றும் கோயில் செயல் அலுவலர் ஆகியோரும் ஊத்துக்கோட்டை வட்டம் பெரியபாளையம் அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ்.விஜயகுமார் அவர்களும் மற்றும் அரசு அலுவலர்களும், திருவள்ளூர் வட்டம் புட்லூர் அருள்மிகு அங்காளபரமேஷ்வரி திருக்கோயிலிலும், திருவள்ளூர் வட்டம் காக்களூர் அருள்மிகு சஞ்சீவிராயர் (எ) வீர ஆஞ்சநேயர் திருக்கோயிலிலும் ஆகிய கோயில்களில் பொது விருந்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) திருமதி.ஜான்சி, திருவள்ளூர் வட்டாட்சியர் திரு.தமிழ்செல்வன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**